**"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால், நான் அசைக்கப்படுவதில்லை." - சங் 16 : 8.**

தன்னுடைய சொந்த சித்தத்தை முழுதுமாக கர்த்தரின் சித்தத்தில் அடக்கம் செய்திருக்கிறவன் ஒரு ஏமாற்றத்தையும் அறியான். ஆனால் அவன் தன் ஜீவியத்தின் ஒவ்வொரு விவகாரத்திலும் தெய்வீக ஏற்பாடு அல்லது கண்காணிப்பு இருக்கிறதை விசுவாசத்தினாலே பார்க்கிறான். மேலும் ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் அவனுக்கு நிச்சயப்படுகிற கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறான். "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." பெரிய எதிரியினுடையதும், உலகத்தினுடையதும், நமது சொந்த மாம்சத்தினுடையதுமான எதிர்ப்புகளை பொறுமையோடும் குறைசொல்லாமலும், முறுமுறுக்காமலும், சந்தோஷத்துடனே, அவைகளை நம்முடைய எல்லா ஞானமும், எல்லா அன்புமுள்ள கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்படுகின்ற ஒழுங்கை ஏற்படுத்துகிற அனுபவத்தின் ஒரு பாகமாக நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம் என்பது கற்றுத்தேறிக்கொண்டிருக்கிற இருதயத்தின் நிலையை அடைந்து கொண்டிருப்பதுக்குரிய சான்றுகளில் ஒன்றாகும்.

**- Z '99, 6 (R 2411)**

தேவனுடைய ஜனங்கள் ஜீவியத்தின் எல்லா விவகாரங்களிலும் தேவனை முதலாவது வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிரத்தைகள் கர்தருடையவைகளோடு முரண்படும்போது, அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை கர்த்தரின் சார்பாக தியாகம் செய்கிறார்கள். ஆகையால் கர்த்தரே அவர்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் இலக்காக இருக்கிறார். அவர்தான் அவர்களுடைய முக்கியமான ஆசைநேசன். அவரும்கூட அவர்களை மற்ற எல்லோருக்கும் மேலாக நேசிக்கிறார். அவர் அவர்கள் பக்கத்திலிருக்கிறார். தங்களுடைய உறுதியிலிருந்தும் கர்த்தருக்கு முன்பாக இருக்கிற தங்களுடைய நிலையிலிருந்தும் விழ எந்த விதத்திலும் அவர்களை அவர் அனுமதிக்கமாட்டார். **- P '30, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 15:2; உபா 10:12; 13:3; சங் 37:4; 45:10; 66:8,9; 73:25,26; 91:14; ஏசா 12:2; 33:22; தானி 3:17; மாற் 12:29-33; ரோம 8:35-39; யூதா 24.**

**கோபுர வாசிப்பு : Z '07, 281 (R 4060).**

**வினாக்கள் : இந்த வார அனுபவங்களில் நான் தேவனுக்கு எவ்வாறு முதலிடம் கொடுத்தேன்? இது எவ்வாறு என்னை நிலைநிற்கச் செய்தது?**